සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE

| මගේ අංකය<br>எனது இல SDD/HO/09/CBO/கொடி<br>My No | ඔබේ අංකය<br>உமது இல ..........................................<br>Your No | දිනය<br>திகதி 2017.05.<br>Date |
|---|---|---|

சமுர்த்தி சுற்றறிக்கை :- சமுதாய அடிப்படை /02/2017/03

சகல மாவட்ட செயலாளர் / மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்,
சகல ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள்,
சகல சமுர்த்தி முகாமையாளர்,
சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
சகல சமுர்த்தி பிரதேச அமைப்புக்களின் தலைவர்களும் செயலாளர்களும்
சகல சமர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்களும் செயலாளர்களும்

**சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினம் 2017 மே 31**
**“துர்நடத்தையினை ஒழிப்போம், முறையான மகிழ்ச்சியினை ஏற்படுத்துவோம், நோயுற்ற தேசம் ஒன்றை உருவாக்குவோம்.**

## 01. அறிமுகம்

2013ம் ஆண்டின் 01ம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் பிரகாரம் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்தும் போதும் வறுமை நிலையினை ஒழித்தல் மற்றும் சமூக சமத்துவத்தினை உறுதிப்படுத்தும் தேசிய கொள்கையினை அமுல்ப்படுத்துவதில் தனிநபர், குடும்பம், குழுக்கள், மற்றும் மக்களை மையமாகக் கொண்ட வாழ்வாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்தவது சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினை ஆரம்பிப்பதன் பிரதான நோக்கமாகும். இந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் போதும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் மற்றும் பிரதேச அமைப்புக்களுக்கும் விசேடமான பணிப்பொறுப்புக்கள் உள்ளன.

2013ம் ஆண்டின் 01ம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் 10 (ஓ) பந்தியின் பிரகாரம்

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4th floor, Sethsiripaya ,Battara

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ(මානව සම්පත්)<br>பணிப்பாளர் ( மனிதவளம்)<br>Director (Human Resource) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ(ක්ෂුද්‍ර මූල්‍ය )<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2873802/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 011-2887280 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | Hot Line: 011- 28 |
| E-mail- | dg@divineguma.gov.lk | diradmin@divineguma.gov.lk | finance@divineguma.gov.lk | Hot Line:0112-885582 | |
| | | Hot Line : 0112-889007 | | | |

**02. செயற்படுத்தப்படும் விதம்**

I) சமுர்த்திப் பயனாளிகளின் தன்னம்பிக்கை சமூகம் தொடர்பான கூட்டுப் பொறுப்புக்கள் சிறந்த பண்புகள் மற்றும் விழுமியங்களை மேம்படுத்துதல் சமுதாய அடிப்படை அமைப்புக்களின் ஒரு குறிக்கோளாகும் என்பதுடன்.

சட்டத்தின் 16 (உ) பந்தியின் பிரகாரம்

II) சமுர்த்தி பயனாளிகளின் மனித ஆளுமை, கூட்டுச் செயற்பாடுகள், நற்பண்புகள் ஆத்மீக விழுமியங்களை மேம்படுத்துவது சமுர்த்தி பிரதேச அமைப்புக்களின் குறிக்கோளாகும்.

இக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு செயற்படுத்தப்படுகின்ற ஒரு வேலைத்திட்டம் ஒன்றாக இம்முறை 2017 மே 31ம் திகதியில் நடைபெறும் சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தை அடிப்படையாகக் கொண்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் செயற்படுத்தும் கொடி தினத்திற்குறிய வேலைத்திட்டங்களுக்குத் தேவையான ஆலோசனைகள் இச்சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்படுகின்றது.

I) அச்சிடப்பட்ட கொடி, ஸ்ரிக்கர், உண்டியல் லேபல்கள், மற்றும் சுவரொட்டிகள் 2017 – மே – 26ம் திகதி சகல மாவட்டச் செயலாளர்களுக்கும் முறைப்படி கிடைக்க ஆவண செய்யப்படும். மாவட்டச் செயலகங்களில் உள்ள சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களால் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் ஒதுக்கப்பட்ட கொடி, ஸ்ரிக்கர், உண்டியல் லேபல்கள், மற்றும் சுவரொட்டிகள் என்பன ஒவ்வொரு தலைமையக முகாமையாளருக்கோ அல்லது சமூக அபிவிருத்தி உதவி உத்தியோகத்தருக்கோ 2017.மே.29ம் திகதிக்கு முன்னர் முறைப்படி ஒப்படைத்தல் வேண்டும்.

II) சகல தலைமையக சமுர்த்தி முகாமையாளர்கள், மற்றும் சமூக அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்களால் தேவையான பிரகாரம் கொடி, ஸ்ரிக்கர்கள், உண்டியல் லேபல், மற்றும் சுவரொட்டிகளை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள், மற்றும் வலய உதவியாளராகக் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக 2017 மே 30ம் திகதியில் சகல பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு முறைப்படி ஒப்படைத்தல் வேண்டும்.

III) சகல பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டுள்ள உண்டியல் லேபல்களை ஒட்டி சிலிடப்பட்ட பாதுகாப்பான பாதுகாப்பான உண்டியல் ஒன்றைத் தாயரித்து தமது பிரிவுக்குச் சொந்தமான சமுதாய அமைப்புக்களின் தலைவர்கள், மற்றும் செயலாளர்கள் மற்றும் பொருளாளர்கள் உட்பட நிறைவேற்றுக் குழுவின் அங்கத்தவர்களுடன் ஒன்றிணைந்து அச் சமுர்த்தி பயனாளிகள் ஊடாக கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்குவதன் ஊடாக போதைப் பொருள் பாவனையினை தவிர்க்கும் செய்திகளை மக்களுக்கு வழங்கி நிதியங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

IV) கொடி, மற்றும் ஸ்ரிக்கர்களை அணிவிப்பதன் மூலம் நிதியங்களை சேகரிப்பது 2017 மே – 31ம் திகதி 11.00 மணிவரை மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும்..

V) கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்கும் போது எக்காரணத்தின் அடிப்படையிலும் சமுர்த்தி பயனாளிகளிடமிருந்தும், மக்களிடமிருந்தும் கட்டாயப்படுத்தி நிதி சேகரிப்புக்களை மேற்கொள்ளலாகாது.

VI) கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்குவதனால் “சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தினை” மக்களிடத்தேயே நினைவூட்டி சமுர்த்தி பயனாளிகள் மற்றும் பொது மக்களையும் புகைத்தல் மற்றும் போதைப் பொருள் பாவனையிலிருந்து மீட்டிக் கொள்ளும் முக்கிய குறிக்கோளின் பொருட்டு இப்பணியினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

VII) கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை பொது மக்களுக்கு வழங்குவதன் மூலம் சேகரிக்கப்படுகின்ற பணத்தை பிரதேசத்தின் சமுர்த்தி பயனாளிகளின் சமூக நலன்புரி நடவடிக்கையின் பொருட்டு மாத்திரம் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

VIII) கொடி மற்றும் ஸ்ரிக்கர்கள் வழங்குவதன் மூலம் சேகரிக்கப்பட்ட நிதி சீலிடப்பட்ட உண்டியலில் மாத்திரம் இடப்பட வேண்டியதுடன் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் கடமையாற்றும் எந்த உத்தியோகத்தரும் நிதி சேகரித்தலாகாது. சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அங்கத்தவர்களாக இருந்தாலும் கூட முறையற்ற விதத்தில் நிதி சேகரித்தலாகாது. ஏதேனும் ஒருநன்கொடையனை தனவந்தர் ஒருவர், அல்லது பிரபலமானவர் ஒருவர் கூடிய பெறுமதியினையுடைய கொண்ட தொகை வழங்கப்படுமாயின் அதனை குறித்த சமுதாய அடிப்படை அமைப்பின் வங்கி கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு வரையப்பட்ட காசோலை ஒன்றின் மூலம் அல்லது கனக்கில் நிதி பொறுப்பேற்கும் பற்றுத்தாளில் (பற்றுச்சீட்டு) பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரால் வழங்கப்படுவதனை மாத்திரம் அத்தொகையினைப் பொறுப்பேற்றல் வேண்டும்.

**03. சேகரித்த தொகையினை வைப்பிலிடுவதும் அறிக்கையிடுவதும்**

I) கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்குவதன் மூலம் நிதி சேகரித்து 2017 – ஜுன் மாதம் 30ம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முடிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அன்னைய தினம் மு.ப. 11. மணியிலிருந்து பி.ப. 01.00 மணிவரை பணமிடப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ள உண்டியல்களை சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் அல்லது செயலாளர் மற்றும் பொருளாளரால் பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு குறித்த சமுதாய அடிப்படை வங்கி வளவில் ஒப்படைத்தல் வேண்டும்.

II) பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரால் சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் அல்லது செயலாளர் மற்றும் பொருளாளர் உட்பட வலய உதவியாளராக பணிபுரியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் முன்னே நிதியிடப்பட்டு சீல்வைக்கப்பட்டுள்ள உண்டியல்களை திறத்தல் வேண்டும்.

III) மேலே 03 II இல் குறிப்பிடப்பட்டுள்ள சகலரினதும் முன்னிலையிலேயே கணக்கிடப்பட்ட நிதியினை முறையான பிரகாரம் ஆவணம் ஒன்றில் பதிந்து அதற்கு பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்பின் பெருளாளரால் கையொப்பமிடல் வேண்டும்.

IV) சேகரித்த நிதியை சமதாய அடிப்படை அமைப்பின் பொருளாளரால் தனது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பெயரில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் ஆரம்பித்துள்ள அங்கத்தவரல்லாதோர் சேகரிப்புக் கணக்கில் வரவு வைத்தல் வேண்டும்.

V) சகல சமுதாய அமைப்புக்களால் நிதியிடப்பட்டு சீல்வைக்கப்பட்ட உண்டியல்கள் சகலதையும் திறந்தது நிதி வைப்பிலிடப்பட்டதன் பின்னர் மேலே 03 III இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அட்டவணையினை வலய உத்தியோகத்தர் மற்றும் வங்கி முகாமையாளராக பணிபுரியம் சமுர்த்தி முகாமையாளரால் கையொப்பமிட்டிருத்தல் வேண்டும். இதன் மூலப் பிரதியினை தலைமையக சமுர்த்தி முகாமையாளருக்கு அனுப்ப வேண்டியதுடன் நிழற்பிரதியினை வங்கியில் ஆவணப்படுத்தல் வேண்டும்.

VI) சகல சமுதாய அடிப்படை அமைப்புக்களிலிருந்தும் வைப்புச் செயய்ப்பட்ட கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்குவதன் மூலம் சேகரிக்கப்பட்ட நிதியினை மாத்திரம் ஒவ்வொரு சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் மற்றும் பொருளாளரின் எழுத்துமூல கோரிக்கைக்கேற்ப பிரதேச அமைப்பின் பெயரில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அங்கத்தவரல்லாதோர் சேமிப்புக் கணக்கில் வரவின் பொருட்டு வரையப்பட்ட காசோலை ஒன்றின் ஊடாக 2017 ஜீலை 05ம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

VII) ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர்களாலும் தனது சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியிலிருந்து கிடைத்த காசோலையினை சமுர்த்தி பிரதேச அமைப்பின் பெயரில் அங்கத்தவரல்லாதோர் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்ததன் பின்னர் ஒவ்வொரு வங்கியாலும் வைப்புச் செய்த தொகையினைக் குறிப்பிட்டு உறுதிப்பாட்டுக் கடிதம் ஒன்றினை தலைமையக சமுர்த்தி முகாமையாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

VIII) தலைமையக சமுர்த்தி முகாமையளாளர்களின் கண்காணிப்பின் கீழ் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக பணிபுரியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் சமுர்த்தி வங்கி முகாமையாளர்களிடமிருந்து கிடைத்த ஒவ்வொரு சமுதாய அடிப்படை அமைப்பினாலும் சேகரித்த தொகை உள்ளடங்கிய அட்டவணைகளின் கூட்டுத்தொகை மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளரால் அனுப்பப்பட்ட வைப்புகளைச் சேகரிக்கும் உறுதிப்பாட்டுக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியடன் சமப்படுகின்றதா என்பதனைப் பரீட்சித்து பிரதேச செயலாளரின் கையெழுத்துடன் விளக்கக் கடிதம் ஒன்றுடன் வலய மட்டத்தில் சேகரிக்கப்பட்ட தொகை தொடர்பில் அட்டவணை ஒன்றினை 2017.ஜுலை.10ம் திகதிக்கு முன்னர் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருக்கு அனுபுதல் வேண்டும்.

IX) மாவட்டத்தின் சமுதாய அடிப்படை அமைப்பு அல்லது சமூக அபிவிருத்தி விடயப்பொறுப்பு உத்தியோகத்தரால் பிரதேச செயலகத்திலிருந்து கிடைக்கின்ற கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்குவதன் மூலம் சேகரிக்கப்பட்ட தொகை உள்ளடங்கிய ஆவணத்தினை தயாரித்து மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் கையெழுத்துடன் விளக்கக் கடிதம் ஒன்றுடன் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவின் பணிப்பாளருக்கு 2017 ஜுலை 15ம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

**04. வைபவங்கள் மற்றும் விசேட வேலைத்திட்டங்கள்**

I) சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு கொடி தினம் நாட்டின் சகல பிரஜைகளுக்கும் விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பிரகாரம் நினைவூட்டும் மூலமாக விசேட வைபவங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

II) ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் பொறுப்பாகவுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் 2017.மே.31ம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னர் விசேட வைபவம் ஒன்றினை தனது அலுவலகத்திற்கு அண்டியதாக ஒழுங்கு செய்யவேண்டியதுடன் அங்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் உள்ள சமயத் தலைவர்கள், முந்திய பிரபலமானவர்கள் அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் மக்களை வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

III) ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியும் உள்ளடங்குகின்றவாறு வலய உதவியாளர்களாக பணிபுரியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் தனது வங்கி வளவுக்குள் 2017 மே 31ம் திகதி மு.ப. 11.30 மணிக்கு முன்னர் விசேட வைபவம் ஒன்றினை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்களின் கண்காணிப்பின் கீழ் ஒழுங்கு செய்தல் வேண்டும். அங்கு சமயத்தலைவர்கள், பிரபலமானவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

IV) ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவும் உள்ளடங்குகின்ற பிரகாரம் தலைமையக சமுர்த்தி முகாமையாளரினதும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளரினதும் கண்காணிப்புடன் சமூக அபிவிருத்தி உதவியாளர்களாக பணிபுரியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் 2017 மே 31ம் திகதி மு.ப. 11.30 மணிக்கு முன்னர் விசேட வைபவத்தினை பிரதேச செயலக வளவில் அல்லது சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச்சங்க கட்டிடம் அமைந்துள்ள வளவில் மேற்கொள்ளப்படல் வேண்டும். அங்கு மதத் தலைவர்கள், பிரபலமானவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் மக்களை கலந்து கொள்ளச் செய்தல் வேண்டும்.

V) ஒவ்வொரு மாவட்டச் செயலக வளவிலும் மாவட்டச் செயலாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் மாவட்ட சமுர்த்தி பணியாளரின் கண்காணிப்புடன் சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி விடயப்பொறுப்பு உத்தியோகத்தரால் விசேட வைபவம் ஒன்றினை 2017.மே.31ம் திகதி மு.ப. 11.30 மணிக்க முன்னர் ஒழுங்கு செய்தல் வேண்டும். அங்கு சமயத்தலைவர்கள், பிரபலமானவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், மற்றும் மக்களை கலந்துக் கொள்ளச் செய்தல் வேண்டும்.

VI) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் கிராம உத்தியோகதர் பிரிவு மட்டத்தில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மட்டத்தில் பிரதேச செயலகம், மாவட்டச் செயலக மட்டத்தில் நடாத்தப்பட்ட விசேட வைபவத்தில் புகைத்தல் மற்றும் போதைப் பொருள் பாவனை மற்றும் அதிலிருந்து விலகியிருப்தனால் கிடைக்கின்ற நிதி மற்றும் நிதியல்லாத நன்மைகள் தொடர்பில் விரிவுரைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடல் வேண்டும்.

VII) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் குறித்த வைபவத்தின் இறுதியில் ஒவ அலுவலக வளவு அமைந்துள்ள சமுதாய அடிப்படை அதிகார பிரதேசத்தின் அங்கத்தவர் சிலரை வரவழைத்து அவர்களூடாக கொடி மற்றம் ஸ்ரிக்கர்களை வழங்குவதன் மூலம் நிதி சேகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

VIII) மேலே மே 31ம் திகதிய சர்வதேச புகைத்தல் மற்றும் போதைப் பொருள் எதிர்ப்பு தினத்தை ஞாபகார்த்தமாக வைபவங்களை நடாத்துகின்ற சந்தர்ப்பங்களில் அல்லது அதற்குப் பின்னரான சந்தர்ப்பங்களில் (2017 ஜுன் 30ம் திகதிக்கு முன்னர்) வீதி நாடகங்கள், சித்திரக் கண்காட்சிகள், சுவரொட்டிக் காட்சிகள், ஊர்வலங்கள் போன்ற விடிசேட வேலைத்திட்டங்கள் ஒவ்வொரு சமுதாய அடிப்படை அமைப்பினாலும் ஒழுங்கு செய்தல் வேண்டும்.

IX) மேலே 04 (VIII) இல் குறிப்பிடப்பட்ட விசேட வேலைத்திட்டங்களிலிருந்து சிறந்த வேலைத்திட்டங்களை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி (வலய) மட்டத்திலும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்திலும் தெரிவு செய்து மதிப்பீட்டுக்குட்படுத்தவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் இதன் பொருட்டு பிரதேச செயலாளரின் ஆலோசணைகளின் பிரகாரம் தலைமையக சமுர்த்தி முகாமையாளர், மற்றும் சமூக அபிவிருத்தி உதவியாளர், ஆகியோரால் பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்றினை ஒழுங்கு செய்ய வேண்டியதுடன் தெரிவு செய்யப்பட்ட சிறந்த விசேடமான வேலைத்திட்டங்களை பிரதேச மட்டத்தின் பொருட்டும் மாவட்ட மட்டத்தில் அட்டவணை ஒன்றிணைத் தயாரித்து மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளரால் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவுக்கு அனுப்புதல் வேண்டும்.

X) 2017.மே. 31ம் திகதியிலிருந்து 2017.30 வரையிலான சர்வதேச புகைத்தல் மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தினை முன்னிட்டு நடாத்தப்படும் வைபவம் மற்றும் விசேட வேலைத்திட்டங்களுக்கு செலவாகும் செலவுகளின் பொருட்டான நிதியை பிரதெச செயலாளரினதும், மாவட்ட செயலாளரினதும் அங்கீகாரத்துடன் பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்திலுள்ள சமூக அபிவிருத்தி நிதியங்களிலிருந்து பெற்றுக் கொள்ள இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

05. பாராட்டுமுறை:-

I. மக்களுக்கு கொடி ம்றறும் ஸ்ரிக்கர்களை வழங்குவதன் மூலம் சேகரித்த கூடியளவு தொகையினை கவனத்திற் கொண்டு பாராட்டுவதற்கான முறைகளை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி (வலய) மட்டத்திலும். பிரதேச செயலக மட்டத்திலும். மாவட்டச் செயலக மட்டத்திலும் பாராட்டுதல்குட்படுத்தப்படும்.

II) ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளராலும் ஒவ்வொரு வங்கி வலயத்திலும் உள்ள சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களிலிருந்து கூடுதலான நிதியை சேகரிக்க சமுதாய அடிப்படை அமைப்புக்களையும் நிதியையும் குறிப்பிட்டு தலைமையக சமுர்த்தி முகாமையாளருக்கு 2017 ஜுலை 05ம் திகதிக்கு முன்னர் எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

III) ஒவ்வொரு தலைமையக முகாமையாளரையும் தனது பிரதேச செயலகப் பிரிவுக்குச் சொந்தமான சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி, சமுதாய அடிப்படை வங்கி அதிகாரப் பிரதேசத்தில் (வலயம்) கூடுதலான தொகையினை சேகரித்த சமுதாய அடிப்படை அமைப்பினையும் தொகையினையும் குறிப்பிட்டு ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியிலும் வைப்பின் பொருட்டு கிடைத்த மொத்தத் தொகையினைக் குறிப்பிட்டு பட்டியல் ஒன்யிணைத் தயாரித்து மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருக்கு 2017 ஜீலை 10ம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

IV) மாவட்டச் செயலகத்தின் சமுதாய அடிப்படை அமைப்பு விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக அபிவிருத்தி விடயப்பொறுப்பு உத்தியோகத்தர் ஊடாக தனது மாவட்டத்தில் கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்குவதன் ஊடாக கூடுதலான தொகையினை சேகரித்த சமுதாய அடிப்படை வங்கி, பிரதேச செயலகப் பிரிவுக்குரிய தொகையுடன் குறிப்பிட்டு பட்டியல் ஒன்யினைத் தயாரித்து மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் கடிதம் ஒன்றுடன் 2017 ஜுலை 15ம் திகதிக்கு முன்னர் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவின் பிரிவுப் பொறுப்பு பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தினை அடையாளப்படுத்தி கொடி மற்றும் ஸ்ரிக்கர் வழங்குவதன் ஊடாக கூடுதலான தொகை நிதியினை சேகரிக்கின்ற சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் அதற்குப் பங்களிப்பினை வழங்குகின்ற பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வலய உதவியாளர்களாக பணிபுரியும் சமூக அபிவிருத்தி உதவியாளர்கள், தலைமையக சமுர்த்தி முகாமையாளர்கள், பிரதேச செயலாளர்கள், மற்றும் மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர்கள், அத்துடன் மாவட்டச் செயலாளர்களை பாராட்டுதலுக்குட்படுத்தி சான்றிதழ்களையும் பரிசீல்களையும் வழங்குவதுடன் தெரிவு செய்யப்பட்ட குழுவொன்றுக்கு வெளிநாட்டுச் சுற்றுலா ஒன்றினை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

குறிப்பு:-

கொடி மற்றும் ஸ்ரிக்கர் வழங்குவதன் மூலம் சேகரிக்கப்படுகின்ற தொகையிலிருந்து கட்டியழெுப்பப்படுகின்ற நிதியங்களைப் பயன்படுத்தி சமுர்த்தி பயனாளிகளின் நலன்பரி நடவடிக்கைககளின் பொருட்டு செலவிட வேண்டிய விதத்தினைக் குறிப்பிடும் சுற்றிக்கை எதிர்காலத்தில் வெளியிடப்படும்.

**விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளல்**

இச் சுற்றிக்கையில் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பில் ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின் தங்களது சமுதாய அடிப்படை பிரிவுப் பொறுப்பு பிரதி பணிப்பாளரை தொடர்பு கொள்ளவும் (தொலைபேசி 011-2873794)

நீல் பண்டார ஹப்புஹின்ன
பணிப்பாளர் தலைமைதிபதி
சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்

பிரதிகள்

1) சமூக வலுவூட்டல் மற்றம் நலனோம்புகை கௌரவ அமைச்சர் - திரு. எஸ்.பி திஸாநாயக்க அவர்கள் - த.கூ.க. பொருட்டு
2) சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை கௌரவ பிரதி அமைச்சர் - திரு.ரஞ்சன் ராமநாயக்க அவர்கள் - த.கூ.க. பொருட்டு
3) செயலாளர் - சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு - த.கூ.க. பொருட்டு
4) மேலதிக செயலாளர் - அபிவிருத்தி சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு - த.கூ.க. பொருட்டு
5) மேலதிக செயலாளர் - நிருவாகம், சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு - த.கூ.க. பொருட்டு
6) பிரதம கணக்காளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க. பொருட்டும்/உ.ந. பொருட்டும்
7) பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
8) சகல பணிப்பாளர்கள் - சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - த.கூ.க. பொருட்டு

Translated By:- M.M.M. Jawhar (Translator)